1989 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-இன் கீழ் முதலமைச்சரின் திருத்த அறிக்கைகள்.

(அ) 3—5—1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 111-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

3—5—1989 அன்று சட்டப்பேரவையில் நான் கூறும்போது வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி எனப் படும் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. ஆர். விஸ்வநாதன் என்பவர் பேசிய கருத்துக்களை வன்னியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் பேசியதாக போலீஸ் சுருக்கெழுத்தர் அனுப்பிய தகவலை ஒட்டி நான் குறிப்பிட்டேன். அந்த மேடையில் திரு. சி. என். ராமமூர்த்தி அவர்கள் இருந்தபோதிலுங்கூட நான் குறிப்பிட்ட கருத்துக்களை அந்தமேடையில் திரு விஸ்வநாதன் என்பவர்தான் பேசியிருக்கிறார். எனவே அதை நடவடிக்கைக் குறிப்பில் திரு சி. என். ராமமூர்த்தி என்பதற்குப் பதிலாக ஆர். விஸ்வநாதன் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

தவறாகத் தகவல் தந்த போலீஸ் சுருக்கெழுத்தர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) 28—4 1989 அன்று அவையில் ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 111—ன் கீழ் மற்றொரு திருத்த அறிக்கை.